**CC No. 154/11 10.11.2025**

**PW 2** மல்லிகா க/பெ.ராமலிங்கம்

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**குவிமுச பிரிவு 311 ன்கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டு எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

**எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் எந்த ஊர் என்றால் வஞ்சிநகரம். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் கூலி வேலை செய்கிறேன். எனக்கு ஊரில் இடம் உள்ளதா என்றால் உள்ளது. எவ்வளவு நிலம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. எனது கணவர் அசா1 ற்கு எவ்வளவு சீர் செய்தார் என்றால் 25 பவுன், மற்றும் சீர்வரிசை பொருட்கள். மேற்கூறிய 25 பவுன் நகை செய்வதற்கு எங்களிடம் பண வசதி இருந்ததா என்றால் இருந்தது. எதன் மூலமாக மேற்கூறிய நகை செய்வதற்கு வருமானம் இருந்தது என்றால் விவசாயம் செய்வதால் இருந்தது. எங்கள் சொந்த நிலத்தில் விவசாயம் செய்யப்பட்டதா என்றால் சொந்த நிலம், மற்றும் ஒத்தி நிலத்திலும் விவசாயம் செய்தோம். எங்கள் நிலத்தில் நான் வேலை செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். மேற்கூறிய நிலம் குறித்து ஆவணங்களை இந்நீதிமன்றதில் தாக்கல் செய்திருந்தால் அசா1 ன் திருமணத்தின்போது நகை செய்வதற்கான வசதி இருந்திருக்குமா என்று தெரிய வந்திருக்கும் என்றால் சரியல்ல, எனது கணவர் உயிருடன் இருந்தபோது அவர் வேலை செய்து 25 பவுன் நகை எனது மகளுக்கு திருமணத்தின்போது செய்துள்ளார். நாங்கள் அசா1 திருமணத்தின்போது 25 பவுன் நகை செய்யவில்லை, எங்களுக்கு மேற்கூறிய நகை செய்வதற்கு பண வசதி இல்லை, வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேலும், திருமணத்தின்போது ரூ.1,1/2 லட்ச ரூபாய்க்கு சீர் வரிசை பொருட்கள் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியல்ல. 1,1/2 லட்சத்திற்கு சீர்வரிசை செய்ததற்கு ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேலும், திருமணத்தின்போது செய்ததாக சொல்லும் 25 பவுன் நகைக்கும் ஆதரவாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல.

2) 1ம் எதிரிக்கு ரூ.50,000/- எனது கணவரும், நானும் சேர்ந்து கொடுத்ததாக சொல்லியுள்ளேன், மேற்கூறிய பணத்தை யார் முன்னிலையில் கொடுத்தேன் என்றால் 4 மற்றும 5ம் எதிரிகள் முன்னிலையில் 1ம் எதிரியிடம் கொடுத்தேன். பொது ஆட்கள் முன்னிலையில் பணம் கொடுக்கவில்லை என்றால் எனது பெரிய மருமகனான ராசு மகன் கணேசன் முன்னிலையில் பணம் கொடுத்தேன். மேற்கூறிய விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் போலீசார் என்னை விசாரிக்கவில்லை. இதற்கு முன்னர் போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. அசா1ற்கும், 1ம் எதிரிக்கும் பிறந்த குழந்தை எந்த தேதியில் பிறந்தது என்றால் தேதி ஞாபகம் இல்லை, 15 வருடத்திற்கு முன்பு குழந்தை பிறந்தது. தற்போது அந்த குழந்தை என்ன வகுப்பு படித்து வருகிறார் என்றால் 10ம் வகுப்பு. எனது முதல்விசாரணையில் அசா1மிருந்து 1ம் எதிரி கணேசன் 5 பவுன் நகையை எடுத்துக்கொண்டு விஜயன் என்பவரிடம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் அந்த விவரத்தை அதற்கு முன்னர் எங்கும் சொல்லவில்லை என்றால் எனது முதல் விசாரணை அன்று முதல்முறையாக சொன்னேன். 1ம் எதிரி அசா1னிடமிருந்து நகைகள் எதுவும் பெறவில்லை, அதை விஜயன் என்பவரிடம் கொடுக்கவும் இல்லை, வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3) அதேபோல் 1ம் எதிரி அசா1னிடமிருந்து நகையை அறுத்து

சென்றதாக சொல்லியதை எனது முதல் விசாரணைக்கு முன்பு எங்கும் சொல்லவில்லை என்றால் சரிதான், நீதிமன்றத்தில்தான் சொன்னேன். மேற்கூறிய எந்த சம்பவமும் நடைபெறவில்லை, வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் எதிரிகள் அனைவரும் சேர்ந்து 25 பவுன் நகையை அசா1 னிடமிருந்து பெற்றுக்கொண்டார்கள் என்ற விவரத்தை இதற்கு முன்னர் வேறு எங்காவது சொல்லியுள்ளேனா என்றால் நீதிமன்றத்தில்தான் சொன்னேன். இந்த வழக்கின் நான் அனைத்து செய்திகளும் பின் யோசனையிட்டு வழக்கிற்காக சொல்லப்பட்டது என்றால் சரியல்ல.

4) இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை, மேலும், எனது முதல் விசாரணையில் சொன்ன அனைத்து விவரங்களும் இதற்கு முன்னர் நான் எங்கும் சொல்லவில்லை, வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.